பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 27 திங்கட்கிழமை 13.10.2025 | அதிர்வு 74

## ஆண் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை!

ஆண் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாகல்கமுவ 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# மாகாணத் தேர்தலை நடத்த அரசுக்குக் கடும் நிர்ப்பந்தம்

பல ஆண்டுகளாகத் தாமதமாகி வந்த மாகாண சபைத் தேர்தலை அடுத்த ஆண்டு மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் முதல் வாரத்தில் நடத்துவதற்கு அநுர அரசாங்கம் தீவிரமாகத் திட்டமிட்டு வருகின்றது. நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார சூழல்கள், குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் ஆகியவற்றின் பின்னணியில், இந்தத் தேர்தல்களை விரைவாக நடத்தி முடிப்பதற்கான நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. 03▶

# வெளியுறவுக் கொள்கையிலும் அரசாங்கத்துக்குள் முரண்பாடு

இலங்கையின் வெளியுறவுக் கொள்கை தொடர்பான கொள்கை முரண்பாடுகள் தற்போது அரசாங்கத்துக்குள்ளேயே ஒரு தீவிரமான உள்நாட்டுப் போராட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தில் உயர்மட்டத்தில் ஏற்பட்டுள்ள கொள்கை ரீதியான முரணபாடுகள் வெளியுறவுக் கொள்கையிலும் தாக்கம் செலுத்தியுள்ளன என்று கூறப்படுகின்றது.

குறிப்பாக மேற்குலக சார்பு நிலையில் ஒரு தரப்பும், மார்க்சிசம் அல்லது சோசலிச சீன சார்பு கொள்கையில் மற்றொரு தரப்பும் ஆளும் கட்சிக்குள் செயல்படுகின்றமையானது, நாட்டின் வெளியுறவுக் கொள்கையை நிலையான போக்கில் முன்னெடுப்பதற்கு சவால்களை ஏற்படுத்துகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. 03▶





# மாகாண சபைத் தேர்தலில் வெற்றி நடை போடுவோம்!

## முதலமைச்சர் வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்கு 4 எம்.பிக்கள் விரைவில் இராஜினாமா என்கிறது சஜித் அணி

மாகாண சபைகளுக்குரிய தேர்தல் நடத்தப்பட்டால் அதில் வெற்றி பெற முடியும் என்ற முழு நம்பிக்கை உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

அவ்வாறு நம்பிக்கை இருப்பதால் தான் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு நான்கு எம்.பிக்கள் முன்வந்துள்ளனர் எனவும் ஊடகங்களிடம் அவர் குறிப்பிட்டார்.

"நாட்டு மக்களும் தேர்தலை எதிர்பார்த்துள்ளனர். இதனால் விரைவில் தேர்தலை நடத்த வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும்." – என்றும் அஜித் பி பெரேரா எம்.பி. மேலும் தெரிவித்தார்.



## மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கும் நோக்குடன்

# திகா எம்.பி. விரைவில் இராஜினாமா?

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், மாகாண சபைத் தேர்தலில் களமிறங்குவதற்குத் திட்டமிட்டுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

தேர்தல் அறிவிப்பு வெளியான பின்பு அவர் எம்.பி. பதவியை இராஜினாமா செய்யவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

மாகாண சபைத் தேர்தலில் மக்கள் ஆணையை பெறும் நோக்கிலேயே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

கட்சி பிரமுகர்களுடன் இது சம்பந்தமாக அவர் ஆலோசனை நடத்தி வருகின்றார் எனவும், விரைவில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மாகாணத் தேர்தலை...

அத்துடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் முக்கியமான மார்ச் அமர்வுகளுக்கு முன்னதாக, தேர்தல் அறிவிப்புகளை வெளியிடுவது மற்றும் சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வது போன்ற முக்கிய சர்வதேச இணக்கத் தீர்மானங்களையும் அரசாங்கம் எடுக்கவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு பொதுத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னர் அறிவித்திருந்தாலும், கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஏற்பட்ட எதிர்பாராத முடிவுகளைத் தொடர்ந்து, மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் முடிவை அரசாங்கம் எடுத்திருந்தது.

எனினும், நாட்டின் சர்வதேச நற்பெயரைக் கட்டியெழுப்புவதற்கும், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும், "சட்டபூர்வமாக நிலுவையில் உள்ள" அனைத்துத் தேர்தல்களையும் நடத்துவது அத்தியாவசியம் என்ற நிலை உருவாகியுள்ளது.

குறிப்பாக, ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின்படி, பல நெருக்கடியான முடிவுகளை அரசாங்கம் எடுக்க வேண்டியிருக்கும். அத்தகைய முடிவுகளை எடுப்பதற்கு முன்னர், மாகாண சபைகளுடன் கலந்தாலோசனை நடத்துவது கட்டாயமாகும். இதற்குச் செயற்பாட்டில் உள்ள மாகாண சபைகள் தேவைப்படுகின்றன. எனவே, சர்வதேச பொருளாதார அழுத்தங்களும், ஜனநாயகக் கடமைகளும் இணைந்து இந்தத் தேர்தலை விரைவுபடுத்தும் காரணியாக அமைந்துள்ளன.

மாகாண சபைத் தேர்தல் கடைசியாக 2012 ஆம் ஆண்டில் கிழக்கு, வட மத்திய, சப்ரகமுவ மாகாணங்களிலும், 2013 ஆம் ஆண்டில் மத்திய, வடமேல், வடக்கு மாகாணங்களிலும் மற்றும் 2014 ஆம் ஆண்டில் ஊவா மாகாணம் என நான்கு கட்டங்களாக நடத்தப்பட்டன. அதன் பிறகு, கடந்த பல ஆண்டுகளாகத் தேர்தல் முறைமையைக் காரணம் காட்டி மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் தாமதப்படுத்தப்பட்டு வருகின்றன.

தாமதத்துக்கான அடிப்படைக் காரணம், புதிய கலப்புத் தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்துவதாகும். இது விகிதாசார மற்றும் வட்டார முறைமைகளை இணைக்கும் ஒரு முறையாகும். புதிய முறைமைக்கு ஏற்ற எல்லைகளை மறுசீரமைப்பதற்காக, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவால் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான ஐந்து பேர் கொண்ட குழு 2017 இல் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு 2018 மார்ச் மாதம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்து, புதிய முறைமைக்கான விரிவான பரிந்துரைகளை வழங்கியது. துரதிர்ஷ்டவசமாக இந்தக் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, புதிய தேர்தல் முறைமையை அமுல்படுத்துவதற்கான சட்டமூலம் நிறைவேற்றப்படாமல், அறிக்கை நிராகரிக்கப்பட்டது.

இந்தச் சட்டச் சிக்கல் காரணமாகவே மாகாண சபைத் தேர்தல் இன்று வரை ஸ்தம்பித்துள்ளன. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பழைய முறைமையா அல்லது புதிய முறைமையா என்ற இரண்டு முக்கிய தெரிவுகளில் ஒன்றை நோக்கி நகர வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

மறுபுறம் சர்வதேச அரங்கில் இணக்கப்பாட்டை நிரூபிக்கவும், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்குத் தேவையான நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றவும் மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## வெளியுறவு...

எந்தவொரு நாட்டுடனும் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளாது இலங்கையின் பொருளாதார நலன்களை கருத்தில் கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் செயற்படுகின்றனர். குறிப்பாக மேற்குலக நாடுகளுடன் இவர்கள் கூடுதலான உறவை வளர்க்க விரும்புகின்றனர்.

இந்த அணுகுமுறை காரணமாகவே அமெரிக்காவின் பக்கமிருந்து பெரும் ஆதரவுகள் அரசாங்கத்துக்குக் கிடைத்தன.

ஆனால் மார்க்சிசம் அல்லது சோசலிச சார்பு கொள்கையில் இருக்கும் ஆளும் கட்சியின் மற்றொரு தரப்பான மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளின் ஆதரவுகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றனர்.

இந்தக் கடுமையான இழுபறி காரணமாக, இலங்கையின் பொருளாதாரத்துக்கு முக்கியமான அம்பாந்தோட்டை சீன எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், கெரவலப்பிட்டிய மற்றும் சப்புகஸ்கந்த போன்ற பல பாரிய வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்கள் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் முடங்கியுள்ளன.

சமீபத்தில், அரசாங்கம் இந்தக் கொள்கை ரீதியான நெருக்கடிகளை தீர்க்கும் வகையில் சில திட்டங்களை முன்னெடுத்திருந்தது. கடவத்தை – மீரிகம அதிவேக நெடுஞ்சாலையின் எஞ்சிய பணிகள் மீண்டும் சீனாவுக்கு வழங்கியது. இதற்கான கடனை அமெரிக்க டொலர்களுக்குப் பதிலாக சீன யுவானில் பெறுவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்தது.

மேலும் அம்பாந்தோட்டை சுத்திகரிப்பு நிலையத்திற்கான சினோபெக் நிறுவனம் கேட்ட 40 வீத சந்தை வாய்ப்பை வழங்கவும் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

அரசாங்கத்தின் இந்த மாற்றத்தைக் கண்காணித்த அமெரிக்கா உடனடியாக எதிர்வினையாற்றியது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் நியூயோர்க் விஜயத்தின் போது, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மூலம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அமெரிக்க தரப்புடன் கலந்துரையாடல்களில் இதன்போது ஈடுபட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைச் சீனாவுக்கு வழங்குவது குறித்து அமெரிக்காவின் கடுமையான கவலைகள் உள்ளன என இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணை வெளியுறவுச் செயலாளர் அலிசன் ஹூக்கர் நேரடியாகக் கூறியிருந்தார் எனவும், அதற்கு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இது முந்தைய அரசாங்கத்தின் முடிவு என்றும், மாற்ற முடியாது என்றும் குறிப்பிட்டார் எனவும் ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. அத்துடன் இலங்கைக்கு முதலீடுகள் தேவைப்படும் போது அமெரிக்கா இன்னும் எந்த முதலீட்டையும் செய்யவில்லை என்றும் அரசாங்கம் பதிலளித்துள்ளது.

இதற்குப் பின்னரே, அமெரிக்க வெளியுறவுத் துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டு, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) கொள்கைகள் காரணமாக முதலீட்டாளர்கள் வர அஞ்சின்றனர் எனவும், வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கையில் ஒத்திசைவின்மை இருப்பதாகவும் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான சிறப்புத் தூதுவரான செர்ஜியோ கோர் மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்த சந்திப்பின் போது, சீன முதலீடுகள் குறித்து விவாதிக்கப்படவில்லை.

அதற்குப் பதிலாக, ஜனாதிபதி ட்ரம்ப் விதித்த 20 வீத வரியைக் குறைப்பது மற்றும் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்துப் பேசப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இலங்கையின் பாதுகாப்புக்காக மேலும் ஒரு கரையோரப் பாதுகாப்பு கப்பல் மற்றும் கண்காணிப்பு சீ-30 ஹெலிக்கொப்டரை வழங்க அமெரிக்கா அவதானம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## ஆண் ஒருவர்...

பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

குடாகல்கமுவ - பெபொல்வெல பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது சகோதரரின் வீட்டில் வேறொரு குழுவுடன் மது அருந்திக்கொண்டிருந்த நிலையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன்போது, உயிரிழந்தவரைச் சகோதரர் வாளால் வெட்டிக் கொலை செய்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலை செய்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சடலம் குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை உரியவாறு நடைமுறைப்படுத்தக் கோரி யாழில் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு முன்பாக இன்று திங்கட்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போது உள்ள ஆசிரியர் இடமாற்றத்தில் அரசியல் பாகுபாடு மற்றும் பழிவாங்கல் காணப்படுகின்றது எனவும், தற்போதுள்ள அரசின் கீழ் சில அதிகாரிகள் அவர்களின் சுயலாபத்துக்காகச் செயற்பட்டுக் கொண்டுள்ளனர் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

ஆசிரியர் இடமாற்றக் கொள்கையைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.












# இலண்டனில் நடைபெற்ற ‘சுடரி விருது’ விழாவில் துவாரகிக்குச் சிறந்த ஊடக ஆளுமைக்கான விருது

பிரித்தானியாவில் வருடாந்தம் நடைபெறும் ‘சுடரி விருது’ விழாவில் 2025 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஊடக ஆளுமைக்கான விருது ஊடக வியலாளரும் ஆய்வாளருமான துவாரகி சுந்தரமூர்த்திக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் மகளிர் அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் இலங்கையிலும் புலத்திலும் வாழும் சமூகம் சார்ந்து உழைத்துக் கொண்டிருக்கும் சாதனைப் பெண்களைக் கௌரவிக்கும் இந்த விழாவானது பிரித்தானியாவின் Hayes பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தாயகத்தைச் சேர்ந்த சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ரனித்தா ஞானராஜா கலந்து சிறப்பித்திருந்தார்.

'Digital Media & Production - Emerging Leader' என்ற விருதைப் பெற்றுள்ள ஊடகவியலாளர் துவாரகி சுந்தரமூர்த்தி, தனியார் செய்தி ஊடகத்தில் செய்தி ஆசிரியராகப் பணிபுரிந்ததுடன் இலங்கை ஊடகத்துறை அமைச்சிலும் கடமையாற்றியிருந்தார்.

தெற்காசிய சட்ட ஆய்வு மையம் மற்றும் அடையாளம் – மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தில் ஆய்வாளராகவும் அவர் கடமையாற்றியிருந்தார்.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், இராணுவத்தினரால் சுவீகரிக்கப்படும் தனியார் காணிகள், போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவத்தினர், போரின் பின்னர் முன்னாள் போராளிகள் எதிர்நோக்கும் அவலங்கள் உள்ளிட்ட பல்வேறு செய்திகள் மற்றும் செய்தி ஆவணப்படுத்தல்களை அவர் மேற்கொண்டிருந்தார்.

அத்துடன் தற்போது இலத்திரனியல் ஊடகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய பயிற்சி வகுப்புகளையும் அவர் மேற்கொண்டு வருகின்றார்.











# அரக்கத்தனமான படகுகளுடன் கடலுக்குள் எவரும் நுழையாதீர்கள்!

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட தலைவர் அன்ரனி சங்கர் இந்திய மீனவர்களுக்கு எச்சரிக்கை

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

நாட்டின் சட்டதிட்டங்களை மீறி தொடர்ந்தும் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கைக்கு தாங்கள் ஆதரவை வழங்குவோம் என்றும் இந்திய மீனவர்கள் மனித நேயத்துடன் செயல்பட வேண்டும் எனவும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட தலைவர் அன்ரனி சங்கர் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று ஞாயிற்றுக் கிழமை (12) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த நிலையில் 47 இந்திய மீனவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். குறித்த கைதுக்கு எதிராக இந்தியாவில் பாரிய அளவில் போராட்டங்களை முன்னெடுக்க தயாராகி வருகின்றனர்.

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து எமது மீனவர்களின் பெறுமதியான மீன்பிடி வலைகளை நாசம் செய்து கொண்டிருக்கின்றீர்கள்.

ஒவ்வொருநாட்டுக்கும் இறையாண்மை இருக்கிறது. குறித்த இறையான்மையை யார் மீறுகிறார்களோ அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இலங்கை இந்திய மீனவர்களுக்கிடையல் பல்வேறு பேச்சுகள் இடம்பெற்றன. பேச்சுகளில் எடுக்கப்பட்ட முடிவுகளை இந்திய மீனவ சங்கங்கள் அல்லது மீனவ அமைப்புகள் கடைப் பிடிக்கவில்லை.

அதற்கு எதிர்மாறாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்று வரை எமது இலங்கை எல்லைக்குள் அத்துமீறி நுழைகின்ற நிலையில் கடற்படையினரால் கைது செய்யப்படுகிறார்கள். ஆனால் இந்திய எல்லைக்குள் வைத்தே அவர்கள் இலங்கை கடற்படை கைது செய்வதாக குற்றம் சுமத்துகிறார்கள்.

தயவு செய்து அரக்கத்தனமாக படகுகளுடன் எங்கள் கடல் எல்லைக்குள் நுழையாதீர்கள். நாங்களும் இந்த கடலை நம்பி இருக்கிறோம்.எங்களையும் வாழ விடுங்கள்.கோடிக்கணக்கான பெறுமதியான கடல் வழங்களையும்,மீன்பிடி உபகரணங்களையும் இழந்து கொண்டிருக்கிறோம்.

உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தற்போது தான் நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வருகிறோம். எமது வாழ்வாதாரத்தையும் முன்னோக்கி கொண்டு செல்கிறோம். கடற்றொழில் அமைச்சர் கூறியது போல் தயவு செய்து இலங்கை கடற்பரப்பில் வராதீர்கள். இலங்கை கடற்பரப்பில் நுழைந்தால் உங்களை கைது செய்வதில் எவ்வித மாற்றமும் இல்லை. அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்களை கைது செய்து சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கடற்றொழில் அமைச்சருக்கும், இலங்கை கடற் படைக்கும் நாங்கள் பூரண ஆதரவை வழங்குவோம்.

உங்களின் கைது, பாதிப்பு எங்களுக்குக் கவலையை ஏற்படுத்துகின்றது. அதனை நாங்கள் உணர்கிறோம். எனவே இனி இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் இருக்க நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்.

மன்னாரில் கடல் உணவு ஏற்றுமதி தொடர்பாகவும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்தும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் என்.எம்.ஆலம் கருத்து தெரிவித்தார்.

புத்தளம், கல்பிட்டி தொடக்கம் மன்னார், பூநகரி, யாழ்ப்பாணம் வரையிலான மீனவர்களின் முக்கிய தொழிலாக நீல நிற கால் நீச்சல் நண்டு தொழில் காணப்பட்டது.

குறித்த நண்டு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.தற்போது அமெரிக்கா குறித்த நண்டு கொள் முதலை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

அதற்கான காரணம் இலங்கையில் இருந்து தாங்கள் கோரிய ஆவணம் அல்லது மீன்பிடி தொடர்பான தகவல்களை உரிய தரப்பினர் வழங்காததால் எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் ஏற்றுமதிக்கான திட்டத்தை அமெரிக்கா நிறுத்துகிறது என்று அறிவித்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஆபத்து எச்சரிக்கை

தென்னிலங்கையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று இளம் பருவத்தினரை - குறிப்பாக 'டீன் ஏஜ்' எனப்படும் பதின்ம வயதுப் பருவத்தினரை - அதிகளவில் பீடித்துள்ள ஒரு பிரச்சினை பற்றிய அதிர்ச்சித் தகவலைத் தந்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய ஆய்வில், இலங்கையின் இளம் பருவத்தினர் பெரும் எண்ணிக்கையிலான மனநல சவால்களை எதிர்கொள்கின்றனர், அவர்களில் நான்கில் ஒருவருக்கு மன அழுத்தத்தின் மருத்துவ ரீதியாக குறிப்பிடத்தக்க அறிகுறிகள் இருக்கின்றன. பாதிக்கும் மேற்பட்டவர்கள் அதிக அளவிலான உளவியல் துயரங்களைப் பற்றி முறைப்பாடுகள் கூறுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் உயர் வகுப்புகளில் பயிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களிடையே நடத்தப்பட்ட இந்த ஆராய்ச்சி, நகர்ப்புற, அரை நகர்ப்புற மற்றும் கிராமப்புற அமைப்புகளைச் சேர்ந்த இளம் பருவத்தினரை ஆய்வு செய்தது.

ஆய்வின்படி, 24 சதவீத மாணவர்கள் மனச்சோர்வின் அறிகுறிகளைக் கொண்டிருந்தனர். அதே நேரத்தில் 60 சதவீதம் பேர் குறிப்பிடத்தக்க உளவியல் துயரங்கள் குறித்து முறைப்பாடளித்தனர்.

இத்தகைய அதிக மன அழுத்த நிலைமைக்குப் பங்களிக்கும் பல முக்கிய ஆபத்துக் காரணிகளை ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். இதில் பெண்கள் என்ற பாலின நிலைமை, வன்முறைக்கு ஆளாகுதல், குறைந்த அளவிலான உடல் செயல்பாடுகள், சமூக ஊடகங்களைத் தினசரி பயன்படுத்துதல், பெற்றோரின் மோதல்கள் மற்றும் கடுமையான கல்வி அழுத்தம் ஆகியவை அடங்குகின்றன.

இந்த கண்டுபிடிப்புகள், இளம் பருவ சிறுமியர், தங்கள் வயதை ஒத்த ஆண் சகாக்களுடன் ஒப்பிடும்போது மன அழுத்தம், மனச் சோர்வு, மனத் தளர்ச்சி ஆகியவற்றுக்கும் ஆளாகிறார்கள் என்பதையும் தெரிவிக்கின்றன.

கண்டுபிடிப்புகள் குறித்து கருத்து தெரிவித்த, ஆய்வின் முக்கிய பங்களிப்பாளரான ஆலோசகர் குழந்தை மற்றும் இளம் பருவ மனநல மருத்துவர் மியுரு சந்திரதாஸ, இந்த முடிவுகள் பெற்றோர்கள், கல்வியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு ஓர் எச்சரிக்கை மணியாக அமைய வேண்டும் என்று சுட்டிக் காட்டுகின்றார்.

வீட்டிலும் பாடசாலைகளிலும் ஆதரவான சூழல்களை உருவாக்குதல், உடல் செயல்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் மனநல ஆதரவை நாடுவதைச் சுற்றியுள்ள களங்கத்தைக் குறைத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

உணர்ச்சி மற்றும் சமூக வளர்ச்சிக்கு இளமைப் பருவம் ஒரு முக்கியமான கட்டமாக இருப்பதால், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறுவது நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.

நாடு மிக முக்கிய கவனம் எடுத்து, கொள்கை ரீதியான முடிவுகளை - தீர்மானங்களை - மேற்கொண்டு கையாள வேண்டிய ஓர் அடிப்படைப் பிரச்சினை இது. வெளியில் விளைவுகளை - முன்னெச்சரிக்கைகளை - தராமல் ஒட்டுமொத்த சமூகத்திலேயே மோசமான பாதிப்புகளை - பின் விளைவுகளை - உருவாக்கக் கூடிய சிக்கல் இது.

# செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு திட்டமிட்டே தாமதம் செய்யப்படுகிறது!

## சமகால அரசியல் உரையரங்கில் ஐங்கரநேசன் குற்றச்சாட்டு



செம்மணி மனிதப் புதைகுழிகளை அகழ்வதற்குத் தேவையான நிதி மூலத்தைக் கண்டறிவதோ, போதிய நிதியை ஒதுக்குவதோ தேசிய மக்கள் சக்தி அரசுக்கு இயலாத ஒன்றல்ல.நிதியை ஒரேயடியாக விடுவிப்பதும் இயலாத ஒன்றல்ல. ஆனால், அரசு நிதியை கால இழுத்தடிப்புகளுக்குப் பிறகு, கட்டம் கட்டமாகவே விடுவித்து வருகிறது.

செம்மணிப் புதைகுழிகளில் இருந்து மிகப்பெரும் எண்ணிக்கையில் எலும்புக் கூடுகள் ஒரேயடியாக வெளிப்படுவதை இந்த அரசு விரும்பவில்லை. அவ்வாறு வெளிப்படுவது, படைத்தரப்பை ஒரு போதும் தண்டிக்க விரும்பாத தேசிய மக்கள் சக்தி அரசுக்கு உள்ளூரிலும் சர்வதேச அரங்கிலும் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும். இதனாலேயே, நிதியைக் காரணம் காட்டி செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு திட்டமிட்டே தாமதிக்கப்படுகிறது.

இவ்வாறு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை (12) நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து உரையாற்றும்போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அங்கு, அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

செம்மணியில் கிரிசாந்தி கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட சம்பவம் அரசுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியதால் தவிர்க்க முடியாமல் விசாரணைகளை முன்னெடுத்தது. இவ்வழக்கில் இராணுவச் சிப்பாய் சோமரட்ண ராஜபக்ச சாட்சியமளித்தபோது தங்களால் 400 பேர் வரையில் கொல்லப்பட்டனர் என்றும் அவர்களின் புதைகுழிகளைத் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால், குற்றவாளி ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியபோதும் புதைகுழிகளைத் தொடர்ந்து அகழ்வதற்கு அரசு முன்வரவில்லை. அதற்குவேண்டிய போதுமான அழுத்தங்களை எமது தலைமைகளும் அரசுக்குக் கொடுக்கவில்லை. இப்போது, சிந்துபாத்தி மயானத்தில் கட்டுமானப் பணிகளுக்காக அகழப்பட்ட இடத்தில் தற்செயலாக வெளிப்பட்ட எலும்புக்கூடே இதுவரையில் இருநூறுகளுக்கும் அதிகமான எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை ஜனநாயக ரீதியில் முன்னெடுப்பதற்கான கதவுகளை முள்ளிவாய்க்கால் பேரவலம் திறந்து விட்டிருந்தது. ஆனால், அவற்றைத் தமிழ்த் தலைமைகள் கண்டுகொள்ளாமல் இலங்கை அரசுக்குச் சர்வதேச அரங்கில் பிணையெடுத்துக் கொடுக்கும் வேலைகளிலேயே ஈடுபட்டன. இப்போது, இனவழிப்பின் சாட்சியங்களாக செம்மணிப் புதைகுழிகளில் இருந்து இருநூறுக்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் எழுந்து நிற்கின்றன.

தமிழின அழிப்பு நிகழ்ந்தது என்பதற்கான சாட்சிகள் பலர் இன்னமும் உள்ளனர். அவர்களால் பயத்தின் காரணமாகத் தங்களை வெளிப்படுத்த இயலவில்லை. ஆனால், உயிருள்ள அந்த சாட்சியங்களைவிட உயிர் இல்லாத எலும்புக்கூடுகள் வலுவான சாட்சியங்களாக இன்று எழுந்து நிற்கின்றன. காலம் எங்களுக்குத் தந்திருக்கும் இந்த வாய்ப்பையாவது எமது தமிழ்த் தலைமைகள் இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும்.- என்றார்.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வீரமணி ஐயர் நினைவரங்கம்

**(பூ.லின்ரன்)**

மகாவித்துவான் ம.த.ந. வீரமணிய ஐயர் நினைவரங்கம் நாளை (14) செவ்வாய் காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடப் பீடாதிபதி றொபேட் அருட்சேகரன் கலந்து கொண்டு நினைவுப்பேருரை ஆற்றவுள்ளார்.

இதன்போது கலாசாலையில் உள்ள வீரமணி ஐயர் திருவுருவச் சிலைக்கான வழிபாடுகளும் இடம்பெறும் என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.








கிருவதாஸ் டினுஜிக்கா,
(மூன்றாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

# மண் வாசம் மறக்காத கிட்டிப்புள்ளு!

நாட்டுப்புறங்களில் வாழும் மக்களால் தொன்று தொட்டு மரபு வழியாக ஆடப்பட்டு வரும் விளையாட்டுகளை நாட்டுப்புற விளையாட்டுகள் என அழைப்பர். பண்டைய தமிழ் மக்களின் நாட்டார் வழக்காறுகளில் ஒரு கூறாக நாட்டார் விளையாட்டுக்கள் காணப்படுகின்றன. ,ந்த நாட்டார் விளையாட்டுக்கள் தோன்றுவதற்கு அந்த மக்களின் வாழ்வியல், அவர்கள் வாழும் சூழல், அவர்கள் மேற்கொள்ளும் தொழிலுமே அடிப்படை காரணமாக அமைந்தன. மனிதன் இந்த பூமியில் தோன்றிய காலத்தில் இருந்தே நாட்டார் விளையாட்டுக்களும் தோன்றிவிட்டன.

ஆரம்ப காலத்தில் மிருகங்களை வேட்டையாடி தமது வாழ்க்கையை நடத்திய ஆதிகால மனிதனில் இருந்தே ஈட்டி எறியும் விளையாட்டு தோற்றம் பெற்றது என முன்னோர்கள் கூறுகின்றனர். இந்த நாட்டார் விளையாட்டுகளை விளையாடுவதற்கான பொதுவான வரையறைகள் என எதுவும் இல்லை. ஆண், பெண், சிறுவர்கள் என அனைத்து வயதினரும் பால் மற்றும் வயது வேறுபாடு இன்றி இந்த விளையாட்டுகளை விளையாட முடியும். உடல் ஆரோக்கியத்துக்காகவும், பொழுது போக்குக்காகவும் மன மகிழ்ச்சிக்காகவும் ஒருங்கே செய்யப்படும் ஒரு வைத்திய சிகிச்சை தான் விளையாட்டுக்கள். இவ்வாறான விளையாட்டுக்களில் மனமும் உடலும் ஒன்றிக்கும் போது ஒரு வித புத்துணர்ச்சி ஏற்படுவது மட்டுமல்லாது உடல் ஆரோக்கியமும் மேம்படுகிறது.

இது மட்டுமல்லாது இவ்வாறான விளையாட்டுக்கள் சிறுவர்களுக்கு சுறுசுறுப்பு, அறிவாற்றல், மனப்பாடம் போன்றவற்றையும் கொடுக்கக் கூடியதாக அமைந்திருக்கின்றது. இன்றைக்கு இவ்வாறான விளையாட்டுகள் கிராமங்களிலும் கூட அழிந்து வரும் நிலையைக் காணலாம். இருப்பினும் சில இடங்களில் தைப்பொங்கல், புதுவருட பிறப்பு போன்ற விசேட தினங்களில் சில விளையாட்டுக்கள் விளையாடப்படுவதையும் காணலாம். இவ்வாறான நாடார் விளையாட்டுக்களாக கிட்டிப்புள்ளு, புள்ளு கிட்டி, பிள்ளையார் கட்டை, பூப்பந்து, சிலம்பு, கண்ணாம்பூச்சி, வார் அடித்தல், வட்டக்கோடு, கிளித் தட்டு,புங்கம் புலியடி, சுரைக்காய் போன்ற பல விளையாட்டுகளை குறிப்பிடலாம். இவ்வாறான விளையாட்டுகளில் ஒன்றான கிட்டிப் புள்ளு பற்றி பார்த்தோமானால்.

இன்றைக்கும் தமிழர்கள் வாழும் பகுதிகளில் அங்கொன்றும், இங்கொன்றுமாக கிராமங்களில் சிறுவர்கள் மத்தியிலே மேற்கொள்ளப்படும் விளையாட்டுகளில் ஒன்றாக கிட்டிப் புள்ளு காணப்படுகின்றது. இவ் விளையாட்டுக்கு இன்றைய காலத்தில் விளையாடப்படும் இன்றைய காலத்தில் விளையாடப்படும் விளையாட்டுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் போன்று விலை உயர்ந்த உபகரணங்கள் இன்றைய காலத்தில் விளையாடப்படும் விளையாட்டுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் போன்று விலை உயர்ந்த உபகரணங்கள் தேவை இல்லை. கிட்டியும் புள்ளும் மட்டுமே போதும். கிட்டி எனப்படுவது ஒரு அங்குல நீளமுள்ள தடிப்பான கம்பு இதன் ஒருபகுதி தட்டையாகவும் மறு பகுதி ஒன்றரை அடி நீளத்திற்கு தறித்தும் இருக்கும். புள்ளு எனப்படுவது அதே கம்பில் மற்றொரு நான்கு அங்குல நீளமான துண்டில் இரு பக்கமும் கூராக சீவி இருக்கும். இந்த விளையாட்டை விளையாடும் போது இதில் சில கலைச்சொற்கள் பிரயோகிக்கப்படும் அதை நன்கு புரிந்து விளையாடும் போதே அந்த விளையாட்டு நன்கு புரிய வாய்ப்பு இருக்கும் அவை முறையே,

உந்துதல் – புள்ளை கிட்டியால் மேலெழுப்புதல், கன்னை– அணி, தடக்குதல் – தடுத்து நிறுத்துதல், பாட்டம் – பாடிக்கொண்டு மூச்சு விடாமல் ஓடுதல், படுதல்– ஆட்டம் இழத்தல், களம்– குழி, கிளம்புதல்– ஆட்டமிழந்தவரை மீண்டும் கொண்டு வருதல், இந்த விளையாட்டு விளையாடப்படும் முறை இவ் விளையாட்டில் இரண்டு அணிகள் காணப்படும். இரண்டு அணிகளிலும் சம எண்ணிக்கையான சிறுவர்கள் காணப்படுவர். இந்த விளையாட்டை மேற்கொள்வதற்கு திறந்தவெளி, மைதானம் போன்ற இடங்களே சிறந்தது. நிலத்தில் குழி தோண்டி அந்த குழியின் மேல் குட்டி பிள்ளை வைத்து தாய்க்கம்பால் குழுவில் உள்ள ஒருவர் உந்துவார். அவரைச் சுற்றி மற்றைய அணியில் உள்ளவர்கள் நிற்பர். இவ்வாறு உந்தப்பட்ட புள்ளை மற்றைய குழுவில் உள்ள ஒருவர் பிடித்து விட்டால் உந்தியவர் விளையாட்டில் இருந்து நீக்கப்படுவார். அவ்வாறு பிடிக்காவிட்டால் அந்தப் பிள்ளை குழியடிக்கு எடுத்து எறிவார்கள். இதன் போது குழியின் குறுக்காக தாய்ப்புள் வைக்கப்பட்டிருக்கும். அந்த தாய் புள்ளில் கிட்டிப்புள் பட்டால் உந்தியவர் விளையாட்டில் இருந்து நீக்கப்படுவார்.

தடக்கி அடிபட்ட புள்ளு வேறொரு திசைக்கு பறந்து செல்லும்போது எதிர் அணியினர் அதனை பிடிக்கலாம்.அவ்வாறு இல்லையே உந்தியவர் புள்ளு கிடக்கும் இடத்துக்கு விரைந்து சென்று அதன் நுணியில் கிட்டியால் தட்டி மேல் எழுப்பி அடிப்பார். இவ்வாறு அடிக்கப்படுவதை “பாட்டம்” என்பார்கள். அவ்வாறு புள்ளு பறந்து சென்று விழும் இடத்திலிருந்து களம்வரை உள்ள தூரத்தை ஆட்டக்காரர் எத்தனை என்று கூறுவார். ஒரு அடியில் பறந்த புள்ளைக் கிட்டியாலும் (தாய்ப்புள்) ஈரடியால் விழுந்த புள்ளை புள்ளு அதனாலும் அளப்பர். ,வ்வாறு விளையாடி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை பெற்றதும் “பாட்டம்” இடம் வரும் பாட்டம் என்பது மூச்சு விடாமல் படித்துக் கொண்டு ஓடுதல் இவ்வாறு பாடப்படும் பாடல்களில் ,

தொடர்ச்சி ▼

# மண் வாசம் மறக்காத கிட்டிப்புள்ளு!

**தொடர்ச்சி ▲**

"ஆலையிலே சோலையிலே
ஆலம்பாடி சந்தையிலே
கிட்டிப் புள்ளும் பம்பரமும்
கிறுகி அடிக்க பாலாறு
பாலாறு..... பாலாறு......"

என்று பாடி ஓடி வர வேண்டும் இப்பாடல்களைப் பாடிக்கொண்டு சிறுவர்கள் ஓடிவரும் போது சிறுவர்களுக்கு இது சிறந்த மூச்சுப்பயிற்சி மற்றும் உடலில் ரீதியாக பல நன்மைகளும் கிடைக்கும்.

இவ்வாறான விளையாட்டுகளில் ஈடுபடுவதால் ஏற்படும் நன்மைகள் இவ்வாறான விளையாட்டுகளை விளையாடுவதன் மூலம் உடலும், உள்ளமும் புத்துணர்ச்சி பெறுவதுடன் மனதுக்கு மகிழ்ச்சியையும் அளிக்கின்றன.

இவ்வாறான விளையாட்டுக்கள் பெரும்பாலும் பாடலுடன் இணைந்தவையாக உள்ளதால் உடல் அசைவையும், ஈடுபாட்டையும் அதிகரிக்கும்.

இவ்வாறான விளையாட்டுக்கள் சிறுவர்களின் சொல்லாற்றல் மற்றும் நினைவாற்றலையும் மேம்படுத்துவனாவாக அமையும். கிராமிய விளையாட்டுகளில் பெரும்பாலானவை குழுவாக இணைந்து செயல்பட ஊக்குவிப்பதால் குழு உணர்வு, சமூக ரீதியான திறன்களை வளர்க்கிறது.

விளையாட்டுக்கள் மூலம் மனமகிழ்ச்சி, மற்றும் மன அமைதியை தருகின்றன. இவ்வாறு தமிழர்களின் பண்பாட்டையும்,பாரம்பரியத்தையும் வெளிப்படுத்தும் நாட்டார் விளையாட்டுக்கள் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் மேலைத்தேய விளையாட்டுகளின் ஆதிக்கத்தால் வலுவிழந்தும் சில விளையாட்டுக்கள் இன்றைக்கு கிராமங்களில் கூட அழிந்துள்ள நிலையினையும் காணலாம். இவ்வாறான விளையாட்டுக்களின் தேவை இன்றைய எதிர் கால சந்ததிக்கு மிக முக்கியமாக காணப்படுவதால் இந்த விளையாட்டுகளை மக்கள் மத்தியில் புத்துயிர் அழிக்க செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.



# வித்தகர் விருது பெற்றுள்ளார் கவிஞர் வி.மைக்கல் கொலின்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான், மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வழங்கும் கிழக்கு மாகாணத்தின் உயரிய விருதான வித்தகர் விருதைப் பெற்றார் கவிஞர் வி. மைக்கல் கொலின்.

தமது வாழ்நாளில் கலை இலக்கியத் துறைக்கு ஆற்றிய பெரும் பணிக்காக ஐம்பது வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு வழங்கப்படும் இந்த விருது கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகரவால் வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த நாற்பத்திரண்டு வருடங்களாகக் கவிஞராக, சிறுகதையாசிரியராக, நாவலாசிரியராக, பத்திரிகையாளராக, சஞ்சிகை ஆசிரியராக, பதிப்பாசிரியராக இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் தொடர்ச்சியாக இயங்கிவரும் மைக்கல் கொலின் நாவல், சிறுகதை கவிதை என இதுவரை எட்டு நூல்களை வெளியிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்ற இவரது 'பரசுராமபூமி' சிறுகதைத் தொகுப்பே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட ஈழத்தின் முதல் சிறுகதைத் தொகுப்பாகும். இது அமேசன் வெளியீடாக வெளிவந்துள்ளது.

தனது மகுடம் பதிப்பகத்தின் மூலம் இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டமைக்காக ஈழத்தில் பதிப்புத் துறைக்கென 'தமிழ்ச்சங்கு விருது,' 'பதிப்புச்செம்மல் விருது' போன்ற விருதுகளைப்பெற்ற முதல் பதிப்பாசிரியர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# அழிவடைந்து செல்லும் கலை, பண்பாட்டினை மெருகூட்டும் நோக்கோடு காத்தவராயன் கூத்து

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் காத்தவராயன் நாட்டுக்கூத்து போட்டி இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இருக்கும் கலைஞர்களை ஊக்கப்படுத்தி வளர்த்தெடுக்கும் நோக்கோடு பிரதேச பண்பாட்டுடன் தொடர்புடைய பழமை வாய்ந்த நாட்டுக் கூத்தான காத்தவராயன் கூத்து போட்டியானது நேற்று (12) புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

முதலாம் இடத்தைக் கொண்டலடி விநாயகர் கலாமன்றத்தினரும், இரண்டாம் இடத்தை முத்தமிழ் கலாமன்றத்தினரும், மூன்றாம் இடத்தை ஆதிபராசக்தி கலாமன்றத்தினரும், குரவில் கலாமன்றத்தினருமாக இரு அணிகளும் பெற்றுக்கொண்டன.

கலைகளை அழிய விடாது குறித்த போட்டியில் பங்குபற்ற உதவிய 4 காத்தவராயன்கூத்துகளுக்குமான அண்ணாவிமார்களுக்கு இதன் போது கௌரவம் வழங்கப்பட்டது.

காத்தவராயன் கூத்து போட்டியில் முதல் இடம் பிடித்த அணியானது எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச பண்பாட்டு பெருவிழாவில் மேடையை அலங்கரிக்கவுள்ளது.

வெற்றி பெற்றவர்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி பிரதேச செயலகத்தால் பண்பாட்டு பெருவிழாவில் வைத்துச் சான்றிதழ்களும் பெறுமதிமிக்க பணப் பரிசில்களும் வழங்கி வைக்கப்படவுள்ளன.

புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் மேம்பாட்டு பேரவையின் தலைவர் பொன்.பேரின்பநாயகம் தலைமையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் திருமதி டென்சியா கிரிதரனின் ஆசி உரையுடன் ஆரம்பமான குறித்த போட்டியில் கலைஞர்கள், பொதுமக்கள், மேம்பாட்டு பேரவை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

புதுக்குடியிருப்பு மேம்பாட்டுப் பேரவையானது இளைஞர்களுக்கு விழிப்பூட்டும் செயலமர்வுகள், இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், கல்விசார் நடவடிக்கைகளை பாடசாலையுடன் சேர்ந்து செய்யும் அதேவேளை, பல அபிவிருத்தி திட்டங்களில் ஒன்றாக புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் கலை, பண்பாடு அழிவடைந்து வரும் நிலையில் அதனை மெருகூட்டுவதற்காக வருடாவருடம் கலை பண்பாட்டு விழாவை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.









தவநேசன் தனுசன்,
(ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

# இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தால் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்கும்!

## ஒக்ரோபர் 13 - பேரிடர் குறைப்புக்கான சர்வதேச தினம்

பேரிடர் என்றால் இயற்கையாலும் அல்லது மனிதச் செயற்பாடுகளாலும் ஏற்படும் பெரும் சேதம், இழப்பு, மற்றும் உயிர் நாசம் ஆகும். நில நடுக்கம், வெள்ளம், சூறாவளி, வறட்சி, நிலச்சரிவு, தீ விபத்து, அல்லது தொழிற்சாலைக் கசிவு போன்ற பல வடிவங்களில் பேரிடர்கள் உலகெங்கும் நிகழ்கின்றன. ஆனால் இவற்றை “தடுக்க முடியாது” என்பது ஒரு பொய்ப்பொருள் ஆகும். சரியான திட்டமிடல், விழிப்புணர்வு, மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் பேரிடர்களின் தாக்கத்தை குறைத்துக் கொள்ள நம்மால் முடியும். இதனை வலியுறுத்துவதற்காக ஆண்டுதோறும் ஒக்ரோபர் 13 அன்று “பேரிடர் குறைப்புக்கான சர்வதேச தினம் (International Day for Disaster Risk Reduction)” அனுசரிக்கப்படுகிறது.

இந்த நாளின் முக்கிய நோக்கமாக உலக மக்களிடையே பேரிடர் ஆபத்து மேலாண்மை பற்றிய விழிப்புணர்வை வளர்த்தல், பேரிடருக்கு முன், அதன் போது, மற்றும் பின்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மக்களுக்கு கல்வியளிப்பது இந்த நாளின் பிரதான நோக்கமாகும். “பேரிடர் நிகழ்ந்த பின் மீட்பு” என்பதிலிருந்து “பேரிடரை முன்னே தடுக்கும்” பாதையில் உலக நாடுகளை நகர்த்தும் விழிப்புணர்வு இயக்கமே இதன் அடிப்படை நோக்கமாகும்.

பேரிடர் குறைப்புக்கான சர்வதேச தினம் முதன் முதலில் ஐக்கிய நாடுகள் சபையால் (UN) 1989 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதன் மூலம் உலகம் முழுவதும் பேரிடர் ஆபத்துகளை குறைக்கும் நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இந்த தினம் ஒரு தனித்தலைப்பை கொண்டு அனுசரிக்கப்படுகிறது. உதாரணமாக, “Build to Last”, “Disaster Risk Governance”, “Fighting Inequality for a Resilient Future” போன்ற தலைப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றம் மற்றும் நகரமயமாக்கல் காரணமாக இயற்கை பேரிடர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் மனித வாழ்வையும் மிகுந்த அளவில் பாதிக்கும் வகையில் பேரிடர்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனால், கல்வி நிலையங்களில் பேரிடர் பாதுகாப்பு பயிற்சி, கட்டட வடிவமைப்பில் பாதுகாப்பு நெறிமுறைகள், மற்றும் சமூக விழிப்புணர்வு திட்டங்கள் போன்றவை இன்றியமையாதவையாகின்றன.

இன்றைய உலக நிலையைப் பார்க்கப் போனால், இன்றைய உலகில் இயற்கை பேரிடர்கள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகின்றன. உலக வங்கியின் அறிக்கைகள் கூறுவதாவது, கடந்த பத்து ஆண்டுகளில் 3 பில்லியன் மக்கள் பேரிடர்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். காலநிலை மாற்றத்தால் கடல் மட்டம் உயர்வதும், காட்டுத்தீயால் பரவலான அழிவுகள் நிகழ்வதும் அதற்குச் சான்றாகும். தொழில்நுட்ப வளர்ச்சியால் மனிதன் இயற்கையை அடக்கியோ அடக்க முயன்றோ செயற்படுவது, இயற்கையின் சமநிலையை சீர்குலைத்துள்ளது. இதன் விளைவாக, பேரிடர்களின் தாக்கம் மேலும் தீவிரமடைந்து வருகிறது.

இலங்கையின் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகிறது என்பதைப் பார்க்கப் போனால் இலங்கையில் புயல், வெள்ளம், மற்றும் நிலச்சரிவு போன்ற பேரிடர்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இதை எதிர்கொள்ள னுளையளவநச ஆயயெபநஅநவெ ஊநவெசந (னுஆஊ) முக்கிய பங்காற்றுகிறது. பள்ளிகள், உள்ளூராட்சி மன்றங்கள், மற்றும் அரச அமைப்புகள் ஒருங்கிணைந்து பேரிடர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. சமீப காலங்களில் சமூக ஊடகங்கள் வழியாகவும் விரைவான தகவல் பரிமாற்றம் நடைபெறுவதால், மக்களிடம் விழிப்புணர்வு அதிகரித்துள்ளது.

பேரிடர் குறைப்பில் அரசு மட்டுமின்றி ஒவ்வொரு குடிமகனும் பங்கு கொள்ள வேண்டும். வீடுகள் மற்றும் பள்ளிகளில் அடிப்படை பாதுகாப்பு திட்டம் அமைத்தல், மரம் நடுதல், மழைநீர் சேகரித்தல், மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடுகளைத் தடுக்குதல் போன்ற சிறிய செயல்கள் கூட பெரிய மாற்றத்தை உருவாக்குகின்றன. பேரிடர் நேரங்களில் ஒருவருக்கொருவர் உதவிடும் மனப்பான்மையும் சமூக ஒற்றுமையை வளர்க்கும்.

“பேரிடரைத் தடுக்க முடியாது” என்ற எண்ணத்திலிருந்து “பேரிடரை குறைக்க முடியும்” என்ற எண்ணம் நோக்கி நாம் நகர வேண்டும். பேரிடர் குறைப்புக்கான சர்வதேச தினம், மனித இனத்துக்கான ஒரு விழிப்புணர்வு என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தால்தான் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்கும். ஒவ்வொருவரும் தமது சமூகத்தில் சிறிய பங்களிப்பு செய்தால், உலகமே பேரிடர் குறைவான ஒரு பாதுகாப்பான வாழ்விடமாக மாறும்.



# கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் குச்சவெளி கடற்கரை சிரமதானம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை குச்சவெளி பிரதேச 221 ஆவது படைப் பிரிவின் புதிய இராணுவ கட்டளையிடும் அதிகாரி பொறுப்பேற்றதன் பின் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கிளீன் ஸ்ரீலங்கா திட்டமானது சுற்றுலா பகுதியான குச்சவெளி கடற்கரையின் கரடி மலை பகுதியில் இடம்பெற்றது. இதன்போது குறித்த கரையோரப் பகுதியில் உள்ள பிளாஸ்டிக் பொருள்கள் உட்பட பல கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டதுடன் இதில் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் யூசூப் ரஹ்மான், இராணுவ அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# தேசிய ஜனநாயக கூட்டணியில் சுமுக உடன்பாடு: பிஹார் பேரவைக்கான தொகுதிப் பங்கீடு முடிந்தது

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தேசிய ஜனநாயக கூட்டணியில் தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஐக்கிய ஜனதா தளம் (ஜே.டி.யூ), பா.ஜ.க. தலா 101 தொகுதிகளில் போட்டியிடுகின்றன.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் நவம்பர் 6, 11 ஆம் திகதிகளில் இரு கட்டங்களாக நடைபெற உள்ளது. நவம்பர் 14 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் ஆளும் ஐக்கிய ஜனதா தளம், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயககூட்டணிக்கும் (என்.டி.ஏ), ராஷ்டிரிய ஜனதா தளம், காங்கிரஸ் அடங்கிய மெகா கூட்டணிக்கும் இடையே நேரடி போட்டி நிலவுகிறது.

பிஹாரில் மொத்தம் 243 தொகுதிகள் உள்ள நிலையில், என்.டி.ஏ. கூட்டணியின் தொகுதிப் பங்கீடு குறித்த உயர்நிலை ஆலோசனை கூட்டம் டில்லியில் நேற்று பல்வேறு



கட்டமாக நடைபெற்றது. முதல்கட்டமாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வீட்டில் நடந்த கூட்டத்தில் பா.ஜ.க. மூத்த தலை வர்கள், ஐக்கிய ஜனதா தள மூத்த தலைவர்கள் சஞ்சய் ஜா, லல்லன் சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பின்னர், பா.ஜ.க. தேசிய தலைவர் நட்டாவின் வீட்டில் பா.ஜ.க. உயர் நிலை தலைவர்கள் ஆலோசனை நடத்தினர். இதன்பிறகு, பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்தில் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங், நட்டா, தர்மேந்திர பிரதான், பிஹார் துணை முதல்வர் சாம்ராட் சவுத்ரி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில் என்.டி.ஏ. கூட்டணியின் தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்பட்டது.

இதுகுறித்து மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், "பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி என்.டி.ஏ. கூட்டணியின் தொகுதிப் பங்கீட்டில் சுமுக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இதன்படி, பா.ஜ.க. 101, ஐக்கிய ஜனதா தளம் (ஜே.டி.யூ) 101, லோக் ஜனசக்தி - ராம்விலாஸ் (எல்.ஜே.பி-ஆர்) 29 , ராஷ்டிரிய லோக் மோர்ச்சா (ஆர்.எல்.எம்) 6 , இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா (எச்.ஏ.எம்) 6 தொகுதிகளில் போட்டியிட உள்ளன. கூட்டணியின் அனைத்து தலைவர்களும், தொண்டர்களும் தொகுதிப் பங்கீட்டை முழுமனதுடன் வரவேற்றுள்ளனர்." என்று குறிப்பிட்டுள்ளார்.





# கரூர் கூட்ட நெரிசல் விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணை இடம்பெறும்

## த.வெ.க. வழக்கில் உச்ச நீதிமன்றம் உத்தரவு

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணையை எதிர்த்து த.வெ.க. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது.

இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜே.கே.மகேஸ்வரி, என்.வி.அஞ்சரியா ஆகியோர் அடங்கிய அமர்வு, இன்று வழங்கிய தீர்ப்பில், கரூரில் 41 பேர் உயிரிழந்த கூட்ட நெரிசல் வழக்கை மத்தியப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) விசாரிக்கும் என்று உத்தரவிட்டுள்ளது.

இந்த விசாரணையை மேற்பார்வை செய்ய உச்ச நீதிமன்றம் ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையிலான மூன்று பேர் கொண்ட குழுவை அமைப்பதாகவும் அறிவித்துள்ளது. வழக்கு விசாரணை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்யும்படி இந்தக் குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளது.

கரூரில் த.வெ.க. பிரசாரக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் எதிரொலியாக அரசியல் கட்சிகளின் கூட்டங்களுக்கு நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கக் கோரி வில்லிவாக்கம் தினேஷ் என்பவர் தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி, த.வெ.க. தலைவரான விஜய்யை கடுமையாக விமர்சித்தும், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த வடக்கு மண்டல பொலிஸ் ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைத்தும் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து த.வெ.க. தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச் செயலாளரான ஆதவ் அர்ஜூனா உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜே.கே.மகேஸ்வரி, என்.வி.அஞ்சரியா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரிக்கப்பட்டு வந்தது.

இந்த வழக்கில் இன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அதன்படி, கரூர் கூட்ட நெரிசல் வழக்கை சி.பி.ஐ. விசாரிக்கும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.






# மெக்சிகோவில் கடும் மழை: 44 பேர் பலி; வீடுகள் சேதம்

மெக்சிகோவின் மத்திய மற்றும் தென்கிழக்கு மாநிலங்களில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

கனமழை காரணமாக மண்சரிவு ஏற்பட்டுள்ளது. மண்சரிவு காரணமாக 16,000 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

மேலும், 59 மருத்துவமனைகளும், 308 பாடசாலைகளும் தேதம் அடைந்துள்ளன.

மின்தடை காரணமாக சுமார் 320,000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.


மீட்பு நடவடிக்கைகளுக்காக 8700 இராணுவர்கள் ஈடுபட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.














# இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சோக் ட்ரம்ப்புக்கு பதக்கம் வழங்குகின்றார்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு, இஸ்ரேல் ஜனாதிபதி கௌரவ பதக்கத்தை (Israeli Presidential Medal of Honor) வழங்குவதாக இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சோக் அறிவித்துள்ளார்.

காசா போர்நிறுத்தத்தில் மத்தியஸ்தம் செய்த அமெரிக்க தலைவரின் பங்கை அங்கீகரிப்பதற்காகவும், பணயக் கைதிகளை விடுவிப்பதை உறுதி செய்ததற்கும் இந்த விருது வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பதக்கம் இஸ்ரேலுக்கோ அல்லது மனித குலத்திற்கோ சிறந்த பங்களிப்பைச் செய்த நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

அந்தவகையில் நெசெட் கூட்டத்தில், ட்ரம்ப்பிற்கு இந்த பதக்கம் வழங்குவதற்கான தனது முடிவை ஜனாதிபதி ஹெர்சாக் முறைப்படி அறிவிப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இஸ்ரேலிய ஜனாதிபதியின் கௌரவ பதக்கத்தை ட்ரம்ப்பிற்கு வழங்குவது ஒரு பெரிய மரியாதை என்று இஸ்ரேல் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



# போர் முடிந்துவிட்டது: ட்ரம்ப் பகிரங்க தகவல்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், காசாவில் இருந்து சிறைபிடிக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்காக இஸ்ரேலுக்குப் பயணம் செய்யும் நிலையில், போர் முடிந்துவிட்டது என அறிவித்துள்ளார்.

போரை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் உச்சிமாநாட்டிற்காக எகிப்திற்கு செல்வதற்கு முன்னர் அவர் இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் போர்நிறுத்தம் நிலைத்திருக்கும் என்றும், காசாவுக்காக விரைவில் ஒரு அமைதிக் குழு அமைக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

காசா தற்போது ஒரு “சிதைவுப்பகுதி” போல தெரிகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் , இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் கட்டார் ஆகியவற்றின் பங்களிப்பையும் டொனால்ட் ட்ரம்ப் பாராட்டியுள்ளார்.

கனடா முரசு
திங்கட்கிழமை | 13/10/2025

கனடாவின் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் வேலை இழப்பு விகிதம் அதிகரிப்பு



03



# சைகையால் சர்ச்சையில் சிக்கினார் மனிடோபா எதிர்க்கட்சித் தலைவர்

கனடாவின் மனிடோபா மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஆபி கான், சட்டமன்ற அமர்வில் தலையில் துப்பாக்கி சுடுவது போல் சைகை செய்ததற்காக மன்னிப்பு கோரியுள்ளார்.

இந்த சர்ச்சை, கல்வி அமைச்சர் டிரேசி ஷ்மிட் கேள்விக்கு பதில் அளிக்கும் போது ஏற்பட்டது.

அப்போது இருக்கையில் அமர்ந்திருந்த கான், தன் சக எம்.எல்.ஏ.விடம் திரும்பி, இரண்டு விரல்களை தன் தலையில் வைத்து, துப்பாக்கி சுடும் போல் சைகை செய்தார். இந்த காட்சி சட்டமன்ற நேரடி ஒளிபரப்பில் பதிவாகியிருந்தது.

02

# காதல் மோசடி சம்பவம் கனடாவில் அதிகரிப்பு

கனடாவில் காதல் வலையில் சிக்க வைக்கும் மோசடிகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன எனவும் இந்த ஆண்டு இதுவரை 778 கனடியர்கள் மொத்தம் 54.6 மில்லியன் டொலர் இழந்துள்ளனர் என கனடிய மோசடி தவிர்ப்பு பிரிவு அறிவித்துள்ளது.

அத்தகைய மோசடிகளில் சிக்கி 80,000 டொலர்களை இழந்த டொரொண்டோவைச் சேர்ந்த ஹ்யூகோ சாஞ்செஸ் தனது அனுபவத்தை பகிர்ந்து, மற்றவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

என் திருமணம் முறிந்தது ஒரு துயரமான அனுபவம். நான் உணர்ச்சி ரீதியாக மிகவும் பலவீனமான நிலையில் இருந்தேன். இணையத்தில் ஒருவரை சந்தித்து நெருக்கமான உறவை உருவாக்கினேன் என சாஞ்செஸ் கூறியுள்ளார்.

அந்தப் பெண் தன்னை நகரத்தில் வசிப்பதாகவும், லினா என அறிமுகப்படுத்தினார் என்றும் சாஞ்செஸ் தெரிவித்தார். இருவரும் காணொலி



அழைப்புகளிலும், குறுந்தகவல்கள் மூலமும் பேசினர். சில வாரங்களுக்குள், அந்தப் பெண் சாஞ்செஸை கிரிப்டோகரன்சியில் முதலீடு செய்ய வலியுறுத்தினார் என குறிப்பிட்டார்.

அந்தப் பெண் தனது பணம் மூன்று மடங்கு ஆகும் என்று தெரிவித்துள்ளார். ஆனால் சில மாதங்களில் நான் 80,000 டொலர்களை இழந்தேன் எனவும் தமது சேமிப்பும், கடன் பெற்ற பணமும் அனைத்தும் போய்விட்டது எனவும் சாஞ்செஸ் கூறினார்.

சாஞ்செஸ் நாற்பதுகளில் இருந்தாலும், பொதுவாக இத்தகைய காதல் மோசடிகளில் சிக்குவோர் முதியவர்கள் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.




# அதிகரிக்கும் தபால் பொதி திருட்டு சம்பவங்கள்; விசேட பொலிஸ் நடவடிக்கையில் 8 பேர் கைது




கனடாவில் தபால் பொதிகளை திருடிய எட்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். 450 இற்கும் மேற்பட்ட திருடப்பட்ட தபால் பொருள்களை பீல் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கடன் அட்டைகள் காசோலைகள், அரசு அடையாள அட்டைகள் உள்ளிட்ட பொருள்களை மீட்டன என தெரிவிக்கப்படுகின்றது.

மீட்கப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு சுமார் 400,000 டொலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணை ஹால்டன் பொலிஸ் மற்றும் கனடா போஸ்ட் இணைந்து கடந்த ஏப்ரல் மாதம் தொடங்கிய "Project Undeliverable" என்ற சிறப்பு நடவடிக்கையின் பகுதியாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விசாரணையில், ஒரு குழுவினர் இணைந்து வீட்டு தபால் பெட்டிகளை குறிவைத்து திருட்டு சம்பவங்களை மேற்கொண்டுள்ளனர் என கண்டறியப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பீல் பிராந்தியத்தில் 2025 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை நடந்த தபால் திருட்டு சம்பவங்களின் வரைபடத்தையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

செப்டம்பர் 8 மற்றும் 9 திகதிகளில், ரெய்ன்பேங்க் தெரு, பிராண்டன் கேட் டிரைவ், ட்விகின் அவென்யூ, கிட்ரிட்ஜ் டிரைவ் உள்ளிட்ட மிசிசாகா பகுதிகளில் பல வீடுகளில் பொலிஸார் தேடுதல் நடத்தியுள்ளனர்.

அந்த சோதனையில் 465 தபால் பொருள்கள், அதில் 255 காசோலைகள், 182 கடன் அட்டைகள் , 35 அரசு அடையாள அட்டைகள், 20 பரிசு அட்டைகள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

சுமன்ப்ரீத் சிங், குர்தீப் சட்டா, ஜசன்தீப் ஜட்டானா, ஹர்மன் சிங், ஜசன்ப்ரீத் சிங், மன்ரூப் சிங், ராஜ்பீர் சிங், உபிந்தர்ஜித் சிங் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டுள்ளனர்.

---

## சைகையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில விநாடிகளில் அவர் அதே சைகையை மீண்டும் செய்தார் என்பது காணொலியில் தெளிவாக தெரிகிறது. அதனை தொடர்ந்து ஆளும் கட்சியான என்.டி.பி. உறுப்பினர்கள் உடனே எதிர்ப்பு தெரிவித்தனர். கான் பின்னர் ஒரு குறுகிய மன்னிப்பு செய்தி வெளி யிட்டார்.

சட்டமன்ற தலைவர் டாம் லின்ட்சே அவரை அறையில் கண்டித்து, மீண்டும் மன்னிப்பு கேட்குமாறு கேட்டுக்கொண்டார்.

"அந்த சைகை மிகவும் ஒழுங்கற்றதும், அவமதிப்பானதுமாக இருந்தது. அது துப்பாக்கி வன்முறையையும் சுய காயப்படுத்தும் செய்கையையும் பிரதி பலிக்கிறது," என்று லின்ட்சே கூறினார்.

"இத்தகைய செயல்கள் தற்போது நிலவும் அரசியல் சூழலில் மிகவும் கவலைக்கிடமானவை. குறிப்பாக, அப்போது மாணவர்கள் பார்வையாளர்கள் அரங்கில் இருந்தனர். இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று," என கல்வி அமைச்சர் ஷ்மிட் கூறியுள்ளார்.

"சட்டமன்றத்தில் எனது குழந்தைத்தனமான நடத்தை மற்றும் சைகைகளுக்காக முழுமையாக மன்னிப்பு கோருகிறேன். அது வெறும் விரக்தியிலிருந்து நடந்த தவறு. இதற்கான எந்த நியாய மும் இல்லை," என ஆபி கான் கூறியுள்ளார்.



# கனடாவின் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் வேலை இழப்பு விகிதம் அதிகரிப்பு

கனடாவின் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் செப்டம்பர் மாதத்தில் வேலை இழப்பு விகிதம் 1.6 சதவீதத்தினால் உயர்ந்ததுள்ளது.

இது கனடாவில் மிகப்பெரிய உயர்வாகும் என கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்ட தகவலில் கூறப்பட்டுள்ளது.

கனடா முழுவதும் செப்டம்பரில் 60,000 புதிய வேலைகள் உருவாகியுள்ளன – இது இரண்டு மாதங்களாக நடந்த வீழ்ச்சிக்கு பின் 0.3 வீத உயர்வாகும். இருப்பினும், தேசிய வேலை இழப்பு விகிதம் 7.1 வீதமென மாறாமல் காணப்படுகின்றது.

பல நேரங்களில் விண்ணப்பதாரர்களின் தகுதிகள் மற்றும் ஆரம்ப நிலை பணிகளுக்கான தேவைகள் பொருந்தாமல் இருக்கின்றன.இதனால், வேலை வழங்குநர்களும் தயங்குகிறார்கள் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# பவர் பேங்க் தொடர்பில் கனடாவில் எச்சரிக்கை

கனடாவிலும் அமெரிக்காவிலும் பவர் பேங்க் பயன்படுத்துவோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈ.எஸ்.ஆர் ஹலோலொக் ESR HaloLock வயர்லெஸ் பவர் பேங்க் சில மொடல்கள் தீப்பற்றும் அபாயம் இருப்பதாக எச்சரித்து, சுமார் 58,000 சாதனங்களை திரும்பப் பெற உத்தரவிட்டுள்ளன. கனடிய சுகாதாரத் திணைக்களம் மற்றும் அமெரிக்க நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் என்பன இவ்வாறு உத்தரவிட்டுள்ளன.

நுகர்வோர் இணைய வழியில் மற்றும் ஈ.எஸ்.ஆர் அதிகாரப்பூர்வ இணையதளத்தின் மூலம் கொள் வனவு சில பவர் பேங்க் மாடல்களை "உடனடியாக பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்" என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி நிறுவனத்தை தொடர்பு கொண்டு நுகர்வோர், முழு பணத்தைத் திரும்பப் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லித்தியம்-அயன் (Lithium-ion) பட்டரி அதிக வெப்பமடைந்து தீப்பற்றும் அபாயம் இருப்பதாக கனடிய சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

திரும்பப்பெறப்பட்ட ESR HaloLock



வயர்லெஸ் பவர் பேங்க் மாடல்கள்:

• மாதிரி 2G520 - நிறங்கள்: கருப்பு, வெள்ளை, லைட் ப்ளூ

• மாதிரி 2G505B - நிறங்கள்: கருப்பு, வெள்ளை, லைட் ப்ளூ, சாம்பல்

• மாதிரி 2G512B - நிறங்கள்: டார்க் ப்ளூ, லைட் ப்ளூ, சாம்பல், வெள்ளை, கருப்பு

• மாதிரி 2G505 - நிறங்கள்: கருப்பு, வெள்ளை

கனடாவில் 9 தீ விபத்து சம்பவங்கள் மற்றும் அமெரிக்காவில் 11 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சொத்து சேதம் ஏற்பட்டாலும் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என கூறப்பட்டுள்ளது.